




# உளப்பகுப்பாய்வுக் கொள்கை –பிராய்ட்

## Sigmund Freud

K.Suwarnarajah

# சுருக்கமான அறிமுகம்



சிக்மண்ட் பிராய்ட்டின் உளவியல் கருத்துக்கள் உலகிற்கு கிடைக்கும் வரை, மனிதர்களுக்கு ஏற்படும் உளவியாதிகளை குணப்படுத்த முடியாது, என்ற கருத்தை தீவிரமாக கொண்ட தனி மனிதர்களும் சமூகமும் அடங்கியதொரு உலகமே காணப்பட்டது.

# சுருக்கமான அறிமுகம்



எல்லா வியாதிகளையும் ஏற்றுக்கொண்ட சமூகம் உளவியாதிகளை ஒரு சமூககேடாகவும், உளவியாதியாளர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்பட வேண்டியவர்களென கூறியது.

ஒரு சில சமூகங்கள் உளவியாதியாளர்களை பேய்களின் படைப்புகளாக நோக்கினர்.

**உளவியாதிகளை உடையோரின் உறவினர்கள் கூட உளவியாதியாளர்களை ஒதுக்கி வைக்க முற்பட்டனர்.**

# சுருக்கமான அறிமுகம்




எல்லா வியாதிகளும் குணப்படுத்தக் கூடியவை ஆனால் உளவியாதிகளை குணப்படுத்த முடியாதவை என்ற தீவிரவாதத்தோடு இருந்த சமூகத்தின் கருத்தக்களை உடைத்தெறிந்த சிக்மண்ட் பிராய்ட் உளவியாதிகளையும் ஏனைய வியாதிகளைப்போன்று குணப்படுத்த முடியும் என்ற புரட்சிகரமான கருத்தை பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் துணிந்து முன்வைத்தார்.

# சுருக்கமான அறிமுகம்



சிக்மண்ட் பிராய்ட் முன்வைத்த கொள்கை உளப்பகுபாய்வுக் கொள்கை Psycho analysis என அழைக்கப்படுகின்றது.


# சுருக்கமான அறிமுகம்



1856-ஆம் ஆண்டு மே மாதம் 6-ஆம் நாள் ஆஸ்திரியாவின் Pribor நகரில் பிறந்தார்பிராய்ட் பாடசாலைக்கல்வியை முடித்து கொண்டு வியன்னா பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அங்கு மருத்துவ துறையைத் தேர்ந்தெடுத்து 1881-ஆம் ஆண்டு மருத்துவ பட்டம் பெற்றார்.

அவர் மருத்துவத்தை தேர்ந்தெடுத்த காரணங்களில முக்கியமானது நோய்களை குணப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல, இயற்கையின் சில புரியாத புதிர்களுக்கு விடை கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காகதான் என அவரது வாழ்க்கை குறிப்புகள் தெரிவிக்கின்றன.

# சுருக்கமான அறிமுகம்



பின்னர். நரம்பியல் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற அவர் சொந்தமாக மருந்தகத்தை ஆரம்பித்தார். ஆரம்பத்திலிருந்தே அவருடைய சிகிச்சை முறைக்கும், கருத்துகளுக்கும் பலத்த எதிர்ப்பு இருந்தது.

பிராய்ட் வகுத்துக்கூறிய புதிய எண்ணங்களை நகைச்சுவையெனக் கேலி செய்தது வியன்னா மருத்துவ கழகம்.

பிராய்ட் மனோவசிய சிகிச்சை முறையை அறிமுகப்படுத்தினார்

# சுருக்கமான அறிமுகம்




பிராய்ட் பயன்படுத்திய மனோ வசிய சிகிச்சை முறையை கடுமையாக எதிர்த்த அவருடைய முன்னால் பேராசிரியர் பிராய்டை தன் 'Cerebral Anatomy Institute' என்ற மூளைக்கூறு கழகத்திலிருந்து தடை செய்தார் அதனால் கல்வி மற்றும் ஆய்வு நடவடிக்கையிலிருந்து விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது

**ஆனால் பிராய்ட மனம் தளராமல் தன் சொந்த மருத்துவத் தொழிலில் கவனம் செலுத்தத் தொடங்கினார்.**

நரம்பியல் சம்பந்தபட்ட நோய்களுக்கும், மன நோய்க்கும் வித்தியாசமான அனுகுமுறையைப் பயன்படுத்தி சிகிச்சைகளைத் தொடர்ந்தார். மனநோய் என்பது மூளையை பாதிக்கக்கூடிய நோய் எனவே நோயாளியின் மனோபாவங்களையும் வரலாற்றையும் கேட்டறிந்து அவர்களின் ஆழ்மனத்தில் பதிந்துள்ள குறைகளை அறிந்து களைய வேண்டும். அவ்வாறு செய்யாதவரையில் எந்த மருந்தாலும் மனநோயை குணப்படுத்த முடியாது என்று முதன் முதலில் கண்டு சொன்னவர் பிராய்ட்தான்

# சுருக்கமான அறிமுகம்




பிராய்ட் வகுத்துத் தந்த சிகிச்சை முறைதான் 'psycho analysis' என்று அழைக்கப்படுகிறது. மருத்துவ வல்லுநர்கள் அவரது சிகிச்சை முறைகளை ஒதுக்கினாலும் நோயாளிகளுடையே அவர் பிரபலம் அடையத் தொடங்கினார்.

வெகு விரைவில் பல மனநோயாளிகள் அவரிடம் கொண்டு வரப்பட்டனர். அந்த நோயாளிகளுக்கு அதுவரை வழங்கப்படாத சிகிச்சை முறைகளை அவர் கையாண்ட போது ஏற்பட்ட அனுபவங்களும், அவர் செய்த பரிசோதனைகளும்தான் புகழ்பெற்ற கோட்பாடுகளை வகுக்க அவருக்குத் துணை புரிந்தன.

பத்து வருட பரிசோதனைகளுக்குப் பிறகு ஹிஸ்டீரியா (Hysteria) எனப்படும் இசிவு நோய் பற்றிய தனது முதலாவது நூலை பிராய்ட் வெளியிட்டார்.

# சுருக்கமான அறிமுகம்



மருத்துவ உளவியலில் அது ஒரு மைல்கல்லாக அமைந்தது. தனது ஆராய்ச்சிகளின் தொடர்ச்சியாக அவர் மனித மனத்தின் தன்மை பற்றி நிறைய சிந்தித்தார் அப்போதுதான் கனவுகளின் பக்கம் அவரின் கவனம் திரும்பியது கனவுகளுக்கும், ஆழ்மனத்திற்கும், நரம்பியல் நோய்களுக்கும் தொடர்பு உண்டு என்று நம்பிய ஃப்ராய்ட் தான் தினசரி கண்ட கனவுகளை எழுதி வைத்து அவற்றை ஆராயத் தொடங்கினார். 1900-ஆம் ஆண்டில் 'The Interpretation of Dreams' என்ற கனவுகளின் விளக்கம் பற்றிய நூலை வெளியிட்டார்.

அந்த நூலில் அவர் ஆழ்மன செயற்பாடுகள் எப்படி கனவுகளின் உள்ளடக்கத்தைப் பாதிக்கின்றன என்று விளக்கியிருந்தார்.


# சுருக்கமான அறிமுகம்



அதோடு வாய் தவறி வார்த்தைகளைச் சொல்வது, பெயர்களை மறந்துபோவது, தானே விபத்துக்குள்ளாவது போன்றவற்றுக்கும் ஆழ்மனத்திற்கும் தொடர்பு உண்டு என்று அவர் விளக்கினார். அவரது கருத்துகளும், நூலும் அவருக்கு அனைத்துலக அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தன.

பிராய்ட் மனநோய் அல்லது நரம்பு கோளாறுகளை உருவாக்குவதில் அடக்கி ஒடுக்கப்பட்ட பாலுணர்ச்சி பெரும்பங்காற்றுகிறது எனும் கொள்கையை வலியுறுத்தினார்.

# சுருக்கமான அறிமுகம்



பிராய்ட் பாலுணர்ச்சியும், சிற்றின்ப வேட்கையும் பதின்ம பருவத்தில் அல்ல குழந்தைப் பருவத்தின் தொடக்கத்திலேயே தோன்றி விடுகின்றன என்றும் அவர் வலியுறுத்தினார். இந்த கருத்துகள் இன்னும் விவாதத்திற்குரியதாக இருந்தாலும் அவருக்கு உளவியல் உலகில் பெரும் புகழைப் பெற்றுத் தந்தன.

மேலும் Super ego> Ego> Id ஆகிய மூன்று ஆதிக்கங்கள் மனத்தை இயக்குகின்றன என்றும், அவற்றை மூளையின் மூன்று பிரிவுகளாக கொள்ளலாம் என்றும் பிராய்ட் கூறினார். வாழ்க்கையில் நடக்கும் கொடூரமான நிகழ்ச்சிகள், பழிவாங்கும் எண்ணங்கள் ஆகியவை Id-இல் பதிவாகின்றன. Super ego> Ego ஆகியவற்றின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கும் போது மனிதன் சராசரியாக வாழ்கிறான்.

# சுருக்கமான அறிமுகம்



Id-இன் ஆதிக்கம் மேலோங்கும் போது பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றி தன்னையறியாமல் தாக்கத் தொடங்கி விடுகிறான்.

அதனால் நோயாளியின் சரித்திரத்தைத் தெரிந்து கொண்டு Id-இல் பதிந்த கொடூர நிகழ்ச்சிகளை தத்துவ முறையில் அழித்து விட்டால் மனநோயை குணப்படுத்தி விடமுடியும் என்பதுதான் பிராய்ட்டின் தத்துவம் ஆகும்

பிராய்ட் 1939-ஆம் ஆண்டு செப்டம்பர் 24-ஆம் நாள் தமது 83-ஆவது வயதில் காலமானார்.



# பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள்

மனிதனின் உளக்கோளாறுகளை நீக்குவதற்கு மனித நடத்தைகளை நன்கு அறிந்துக் கொள்ளுதல் வேண்டும்.



# பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள்

உள்ளத்தை மூன்று பகுதிகளாக பிரித்தார்.

1. நனவு நிலை உள்ளம். Conscious
2. நனவடி நிலை உள்ளம். Sub Conscious
3. நனவிலி நிலை உள்ளம் Unconscious

# பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள்

## நனவு நிலை உள்ளம்.
## conscious

அன்றாட வாழ்வில் உடனுக்குடன் நடைபெறும் அனபவங்கள் நனவு நிலையில் இடம்பெறும் இவை இலகுவில் மீட்டுக் ஞாபகப்படுத்திக் கொள்ளப்படக்கூடியன.



## நனவிலி நிலை உள்ளம்.
## Sub conscious


ஒருவருடைய வாழ்வில் நடைபெறும் சாதாரணமான எண்ணங்கள் யாவும் நாளடைவில் நனவலி நிலையை அடைகின்றன. ஆனால் அவற்றை மறந்து விடுவதால் அவை மறுபடியும் நனவு நிலைக்கு வரமாட்டா. நனவலி நிலையே உள்ளத்தின் பெரும்பங்கு ஆகும்.

## நனவடி நிலை உள்ளம்.
## Unconscious

நனவிலி நிலையின் ஒரு சிறுபகுதி நனவடி நிலையாகும். இதனுள் ஒருவருடைய நிறைவேறாத ஆசைகள், சமூகத்திற்கு விரோதமான செயல்கள் யாவும் அடக்கி வைக்கப்படுகின்றன. இது அழுத்தி வைக்கப்பட்ட வில் போன்றது. சந்தர்ப்பம் கிடைத்தவுடன் நனவு நிலையில் தோன்றி அவற்றை நிறைவேற்ற முயற்சிக்கும். கனவுகளிலும் இது நிகழும்.



# பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள்





# பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள்

3.நனவடி உள்ளத்திலே பெரும்பாலும் சிறு வயதில் நிறைவேறாத பாலுணர்வு தொடர்பான ஆசைகளே அடக்கப்பட்டிருக்கும்.

4. பாலுணர்வு என்ற சொல் வெறுமனே காமத்தை மட்டும் குறிக்கவில்லை. காதலுணர்வு, அன்பு, மகிழ்ச்சி. என்பனவற்றைக் குறித்து நிற்கின்றது.

5.நனவடி உள்ளத்தில் சேர்க்கப்படும் எண்ணங்களே ஒருவருடைய நடத்தைக்கு ஊக்கமளிக்கின்றது.



# பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள்

6.சுய உணர்வின்றி ஒருவன் மேற்கொள்ளும் அடக்கல்,நியாயம் காணல்,புறத்தேற்றல், போன்ற உளச்சீராக்க தொழிற்பாடுகள் யாவற்றிற்கும் நனவிலி ஊக்கலே காரணம்.

7.ஒரு குழந்தை இன்பத்தை அடைவதையே குிக்கோளாகக் கொண்டள்ளது.என்றும் அவை நிறைவேற்றப்படாவிடத்து அவை நனவடி நிலையில் சேர்க்கப்படுகின்றன.

8. குழந்தைப்பருவமே ஒருவனுடைய ஆளுமையை தீர்மானிக்கின்றது.



# பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள்

9.ஒவ்வொரு மனிதனின் பாலுணர்வு வளர்ச்சியிலும் மூன்று முக்கிய நிலைகள் உள்ளன.

| |
|---|
| • பிறப்பு தொடக்கம் ஆறு வயது வரை- **குழந்தை பாலுணர்வுக் கொண்ட நிலை.** |
| • ஆறு முதல் பன்னரண்டு வயது வரை- **மறைநிலை** |
| • பன்னிரண்டு வயது முதல் முதிரச்சிப்பருவம் வரை- **பாலுணர்வு வளாச்சியின் இறுதிநிலை.** |

# பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள்

10.பிறப்பு தொடக்கம் ஆறு வயது வரை- **குழந்தை பாலுணர்வுக் கொண்ட நிலை.** மூன்று பருவங்களைக் கொண்டது.

**வாய் வழி இன்ப நிலை (Oral Stage)**

**ஏறக்குறைய பிறப்பு முதல் ஒருவயது வரை**
**வாய்வழியாக குழந்தை இன்பத்தை அனுபவிக்கின்றது.**
**(உறிஞ்சுதல் சப்புதல்)**
**தாயிடம் பால குடிப்பதன் மூலம் திருப்தி அடைய முனைகின்றது.**

**குத வழி இன்ப நிலை (Anal Stage)**

ஏறக்குறைய ஒன்று முதல் நான்கு வயது வரை
மலத்தை உள்ளடக்குவதன் மூலமும் மலத்தை வெளியேற்றுவதிலும் குழந்தை இன்பம் பெறுகின்றது.

**பாலுறுப்பு இன்ப நிலை (Phallic Stage)**

ஏறக்குறைய நான்கு முதல் ஆறு வயது வரை
தமது பாலுறுப்பக்களை கையாளுவதன் மூலமாக இன்பம் பெற முயற்சிக்கின்றது.
(இடிபஸ் சிக்கல்- சிறுவர்கள் தாயிடம் அதிக அன்பு தந்தையை வெறுத்தல்
ஏலெக்டரா சிக்கல்-சிறுமிகள் தந்தையிடம் அதிக அன்பு தாயை வெறுத்தல்)



## பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள

11.ஆறு முதல் பன்னரண்டு வயது வரை- **மறைநிலை** (Latent Stage)

இப்பருவத்தில் பிள்ளை சமூக ஒழுக்க வளாச்சியியிலும் அறிவ வளர்ச்சியிலும் அதிக கவனம் செலுத்துகின்றது.பாலுணர்வு இப்பருவத்தில் உள்ளடக்கியுள்ளது.எதிாபால் நாட்டம அற்ற பருவம் இதுவாகும்.



# பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள

12.பன்னிரண்டு வயது முதல் முதிரச்சிப்பருவம் வரை-**பாலுணர்வு வளாச்சியின் இறுதிநிலை** (Genital Stage)


இப்பருவத்தில் இரண்டு குறிப்பிடத்தக்க பருவங்கள் உண்டு


- **தற்பால் காமம்.-** ***12- 15*** **வயது வரை பிள்ளைகள் தமது பாலாரான தோழர்களுடன் மட்டும் தொடர்பு.**
- **எதிர்பால் காமம்.- கட்டிளமைப்பருவத்தில் எதிர் பாலார் தொடர்பில் விருப்பம்**



# பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள

13.உள்ளத்தின் செயற்பாடுகள் பிராய்ட் உள்ளத்தின் செயற்பாடுகளை மூன்றாக பிரித்துள்ளார்.அவையாவன




Example:
I want to eat chocolate!
ID
EGO
Eats a small bar of chocolate
I am on a super diet!
SUPEREGO
fppt.com

# பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள

## இட்(ID) விலங்குணாச்சி

ஒருவருக்கு பிறப்பிலேயே கிடைக்கும் ஒரு நிலைமையாகும்.

ஒருவனது சக்தியை காட்டும் நிலைமை.

உதாரணம் ஒருவர் காதலில் தோல்வியடையும் போது அதற்கு முகங் கொடுக்கும் தன்மை இட்டின் படி ஒன்றுக்கொன்று வேறுபடும்

தற்கொலை அல்லது முறிவை தாங்கிக் கொள்ளல்.

இட் எப்போதும் இயல்பூக்கத்தினை ஏற்படுத்தும். ஆதனை இரண்டு பிரிவாக பிரிக்கலாம்

- வாழும் இயல்பூக்கம் (EROS)

(சுய பாதுகாப்பு முயற்சிகள்,பாலியல் உந்தல்,

- மரண இயல்பூக்கம் (THANATOS)

(இம்சை,வன்செயல்,காமவெறி,தற்கொலை,சித்திரவதை)

# பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள

**அகம் (EGO) பண்பாட்டுணர்ச்சி**

பிறப்பின் பின் வளர்ச்சியடையும் ஒன்றாகும்

ஒருவரின் தாக்கரீதியான அறிவு.

இட்டை சமநிலைப்படுத்தி சாதாரணநிலையில் வைத்திருக்கும் பணியை செய்தல்.

# பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்களா

## அதியகம் (SUPPER EGO) அறநெறி உணாச்சி


பிறப்பின் பின் வளர்ச்சியடையும் ஒன்றாகும்
விசேடமாக ஒழுக்கத்தை குறித்து நிற்பது
மதம்,விழுமியம்,கலாசாரம், மூத்தோர் அறிவுரையை மதித்தல் எனபவனற்றின் அடிப்படையில் வளரும் ஒன்றாகும்.
இரு பகுதிகளைக் கொண்டது.

- ஈகோ உண்மைநிலை

(சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடுகளினால் மகிழ்ச்சி அடைதல்)

- மனசாட்சி

(சமூக விரோத செயல்களால் சோகமடையும் நிலை)



## பிராய்ட்டின் முக்கியமான கருத்துக்கள்

- ஈடிபஸ் சிக்கல் (Oedipus Complex)
- இலெக்ட்ரா சிக்கல்(Electra Complex)